**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.83/2021**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.03.2026 | | |
| பெயர்: | சிந்தாமணி<br>(DW–1 Chief ) | கணவர் பெயர்: | பாண்டியன் |
| கிராமம்: | காத்திருப்பு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 56/2026 |

**முதல் விசாரணை : 10.03.2026**

நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 04.02.2008 தேதியில் அ.வ.எண்.310/2004–ல் ஏற்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–1** ஆகவும்,

2. கடந்த 04.02.2008 தேதியில் அ.வ.எண்.310/2004–ல் ஏற்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–2** ஆகவும்,

3. கடந்த 10.10.1977 தேதியிட்ட எனது தாயார் ரங்கநாயகி பெயரில் ஏற்பட்ட சுத்தக்கிரய சாசனம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–3** ஆகவும்,

4. கடந்த 11.05.1999 தேதியிட்ட எனது தாயார் ரங்கநாயகிக்கு இந்த வழக்கின் வாதி சாந்தி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட

நகல் **பி.வா.சா.ஆ–4** ஆகவும்,

5. கடந்த 15.12.2015 தேதியிட்ட எனது தாயார் எழுதிக்கொடுத்த உயில் அசல் (பதிவு செய்யப்படாதது) **பி.வா.சா.ஆ–5** ஆகவும்,

6. கடந்த 07.01.2016 தேதியிட்ட எனது தாயார் ரங்கநாயகியின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–6** ஆகவும்,

7. எனது தந்தை சபாபதி பிள்ளையின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–7** ஆகவும்,

8. எனது தாயார் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–8** ஆகவும்,

9. மேற்படி புகாருக்கான மனு ரசீது சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–9** ஆகவும்,

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.